முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

நிறைவேற்று மனு எண் 32/2011

நிறைவேற்றுகை விண்ணப்ப எண் 58/2018

ம.சா.1 – பெரியசாமி

27–01–2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நீங்கள் மூர்த்தி காபி தூள் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறீர்கள் என்றால் சரிதான். எந்த விலாசத்தில் கடை நடத்தி வருகிறீர்கள் என்றால் அதியமான் வீதி, 2வது வீதி, திருப்பூரில் நடத்தி வருகிறேன். நீங்கள் யாரிடமிருந்து கிரயம் பெற்றீர்கள் என்றால் நாராயணன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். நாராயணன் மகள் தான் நிறைவேற்று மனுவின் மனுதாரர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாராயணன் மகள் சித்ராதேவி தான் நிறைவேற்று மனுவின் மனுதாரர் என்று உங்களுக்கு தெரியும் என்றும் நீங்கள் அதை மறைத்து மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டளை சார்வு செய்யும் நபர்கள் பலமுறை உங்களிடம் வந்து கட்டிடத்தை காலி செய்ய சம்மன் அறிவிப்பு ஆகியவை கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறுதிநிலை தீர்ப்பாணை மனுவின் பேரில் நீதிமன்ற ஆணையர் உங்கள் கடை உள்ள சொத்தை நில அளவையருடன் அளந்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் சொல்லி உள்ள விலாசம் ஷெரீப் காலனி, என்றால் சரிதான், அது நான் குடியிருக்கும் இடமாகும். வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்து கே.எஸ்.சி பள்ளி அமைந்துள்ள பகுதியில் உள்ள அதியமான் வீதியில் உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.9 ரசீதுகளில் அதியமான் வீதி சொத்து சம்பந்தமாக வரி செலுத்தப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் 3ம் எதிர்மனுதாரராக உங்களை வழக்கமாக அனைவரும் அழைக்கும் பெயரான மூர்த்தி என்ற பெயரில்

சேர்க்கப்பட்டு உங்களுக்கு இறுதிநிலை தீர்ப்பாணையின் அறிவிப்பு எண் 30 அதியமான் வீதி என்ற முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை என்னுடைய பெயர் பெரியசாமி. உங்களுக்கு மூர்த்தி என்ற பெயருள்ளது என்றும் அதனால் தான் உங்கள் நிறுவனத்துக்கு மூர்த்தி காபி என்ற பெயர் வைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, நான் 40 வருடமாக மூர்த்தி காபி என்ற பெயரில் வைத்துள்ளேன் ஆனால் என் பெயர் பெரியசாமி தான். நீங்கள் இறுதிநிலை தீர்ப்பாணையின் 3 வது எதிர்மனுதாரராக உள்ளீர்கள் என்றும் அதை மறைத்து தற்சமயம் பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவின் மனுதாரரான சித்ராதேவி 27-6-1990 ல் தன்னுடைய தகப்பனாருக்கு எதிராக பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் 1948 ம் ஆண்டு சொத்தை நாராயணனிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளேன். நீங்கள் சொன்னவாறு 1948 ல் கிரயம் பெறவில்லை என்றும் நாராயணனிடம் இருந்து பிரச்சினைக்குரிய சொத்தை உங்கள் தரப்பு சான்றாவணம் 3 கிரய ஆவணப்படி 3-5-1991 ல் கிரயம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். நிறைவேற்று மனுவின் மனுதாரர் சித்ராதேவி பாகம் கோரி தாக்கல் செய்த வழக்கில் 15-03-1994 ல் பாகமுள்ளதாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நீங்கள் ம.சா.ஆ.2 ஆக கிரய ஒப்பந்தம் உள்ளதாக சொல்லி உள்ளீர்கள் அது பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் என்றால் சரிதான். நீங்கள் கிரயம் பெற்ற ம.சா.ஆ.3 கிரயப் பத்திரத்தில் கிரய ஒப்பந்தப் பத்திரம் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளோம். நீங்கள் 3.5.1991 ம் தேதி, சித்ராதேவி தாக்கல் செய்திருந்த பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ள போது கிரயம் பெற்று உள்ளீர்கள் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ள போது இந்த கிரயம் ஏற்பட்டதார் ம.சா.ஆ.3 கிரயப் பத்திரம் சித்ராதேவியை கட்டுப்படுத்தாது

என்று சொன்னால் அது சரியல்ல. நீங்கள் சித்ராதேவி தகப்பனாருடன் சேர்ந்து சித்ராதேவிக்கு சொத்து கிடைக்கக்கூடாது என்ற எண்ணத்தில் வேண்டுமென்றே மோசடியாக இந்த வழக்குக்கு முன்பாக கிரய ஒப்பந்தம் ஏற்பட்டது போல் ம.சா.ஆ.2 கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தினீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு உள்ள விவரம் நீங்கள் எப்போது தெரிந்து கொண்டீர்கள் என்றால் 2014 ம் ஆண்டு நான் பிரச்சினைக்குரிய இடத்தில் பழக்குடோனுக்கு வாடகைக்கு கொடுத்துள்ள நபர் மூலம் தெரிந்து கொண்டேன். அதன்பிறகு நீங்கள் உங்கள் சொத்தில் ஏற்பட்ட முதல்நிலை தீர்ப்பாணை, இறுதிநிலை தீர்ப்பாணையை எதிர்த்து வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல விவரம் தெரிந்த பிறகு வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுத்தேன். நீங்கள் வழக்கு பற்றி 2014 ம் ஆண்டு தெரிந்த பிறகு 2017 ம் ஆண்டுக்குள் நடவடிக்கை எடுத்து இருக்கவேண்டும் அதற்கு பிறகு நடவடிக்கை எடுக்க உங்களுக்கு கால அவகாசம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. என்னுடைய கடைக்கு அருகில் மூர்த்திஎன்பவர் கடை வைத்துள்ளார் அவர் தூண்டுதலின் பேரில் தான் சித்ரா தேவி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என தெரிந்து கொண்டேன். நீங்கள் சொல்வது உண்மையல்ல என்றும் மூர்த்தி எனச் சொல்லப்படுவது நீங்கள் தான் என்றால் சரியல்ல. 16–11–2009 ம் தேதி நீதிமன்ற ஆணையர், வழக்கறிஞர், நில அளவையர் ஆகியோர் இறுதி நிலை தீர்ப்பாணை மனுவின் பேரில் சொத்துக்களை அளவீடு செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு நீங்கள் சொல்வது உண்மையல்ல என்றும் நீங்கள் உடன் இருந்தீர்கள் என்றால் சரியல்ல. பிரச்சினைக்குரிய சொத்து கட்டிடத்தை அளந்தது உங்களுக்கு தெரியவில்லை என அதே கட்டிடத்தில் தொழில் செய்து வரும் உங்களுக்கு தெரியவில்லை என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது அதாவது சித்ராதேவி அவரது தகப்பனார் நாராயணனுக்கு

எதிராக 1990 ல் அ.வ.247/90 தாக்கல் செய்து நிலுவையில் இருந்தபோது மேற்படி வழக்கை தெரிந்தே நீங்கள் நாராயணனிடம் ம.சா.ஆ.3 கிரயப் பத்திரப்படி 1991 ல் சொத்தை கிரயம் பெற்று உள்ளீர்கள் ஆகவே நீங்கள் வழக்கு நிலுவையில் உள்ளபோது கிரயம் பெற்றதாக சித்ராதேவி தாக்கல் செய்தவழக்கில் பிறப்பிக்கப்பட்ட பாக தீர்ப்பின்படி சித்ராதேவி அவரது பாகத்தை அடைய தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவை தடுக்க உங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல., நீங்கள் அ.வ.247/90 ன் முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு கட்டுப்பட்டவர் என்றால் சரியல்ல. மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இதுவரை மேல்முறையீடு தாக்கல் செய்யாததால் அந்த தீர்ப்பு இறுதிநிலை அடைந்துவிட்டது என்றும் இந்நிலையில் சித்ராதேவியின் நிறைவேற்று மனுவை ஆட்சேபிக்க உங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. சித்ராதேவிக்கு சட்டப்படி கிடைக்கக்கூடிய சொத்தை அவர் அடையாமல் தாமதப்படுத்தும் நோக்கில் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

நீங்கள் எஸ். கண்ணன் என்ற வழக்கறிஞர் மூலம் சித்ராதேவியின் நி.வி.மனு எண் 32/2011 ஆஜராகி உள்ளீர்கள் என்றால் இல்லை. மூர்த்தி என்பவர் எங்கு உள்ளார் என்றால் அவர் எனது கடைக்கு பக்கத்தில் கோழிக்கடை வைத்துள்ளார். நீங்கள் மூர்த்தி என தெரியும் என்பதால் வேறொரு நபரை கொண்டு நி.மனுவில் வழக்கறிஞரை நியமித்து உள்ளீர்கள் என்றால் சரியல்ல. மூர்த்தி என்பவருக்கு வழக்குச் சொத்தில் உள்ள முகவரியில் தான் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது என்ற நிலையில் வழக்கு அறிவிப்பை பெற்றுக் கொண்ட நீங்கள் வேண்டுமென்றே வேறொரு நபரை மூர்த்தி என ஏற்பாடு செய்து வழக்கில் ஆஜராக செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நாராயணனின் சுயார்ஜித சொத்து எனச் சொல்லி உள்ளது உண்மையல்ல என்றும் அது பூர்வீகச் சொத்து என்றால் சரியல்ல. அது நாராயணின் அப்பாவின் சொத்து. அந்த

சொத்தின் தன்மை குறித்து இப்போது இந்த மனுவில் பிரச்சினை எழுப்ப உங்களுக்கு உரிமையில்லை என்றும் சொத்தின் தன்மை குறித்து முதல் நிலை தீர்ப்பாணையில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

R KARTHIKEYAN

Digitally signed by R KARTHIKEYAN
Date: 2023.01.27 17:26:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்.